**OS.No.21/2023, Dated 04.09.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 4th day of Sep 2025.

**வா.சா.2 –ராதாகிருஷ்ணன் த/பெ. வரதன் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு தற்சமயம் 72 வயதாகிறது. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சுப்பிரமணிதம்பிராரின் தகப்பனார் பெயர் சண்முகம் ஆகும். சுப்பிரமணிதம்பிராரின் பாட்டனார் பெயர் எனக்கு தெரியாது. சண்முகத்துடன் பிறந்தவர்கள் வேறு யாரும் இல்லை. எதற்காக இந்த வழக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கிணறு பிரச்சணைக்காக தாக்கல் செய்யப்பட்டள்ளது. வாதியின் பின் வீட்டில் நான் வசித்து வருகிறேன். வாதி எனது உறவினர் இல்லை. நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஒரு நாளைக்கு வேலைக்கு செல்லவில்லை என்றால் எனக்கு ரூ.1000/– இழப்பாகும். அந்த இழப்பிற்கு பணம் கொடுத்துவிடுவதாக சொல்லி வாதி என்னை அழைத்து வந்தாரா என்றால் இல்லை. எனக்கு நிலம் ஆணைப்போகி ஊரில் உள்ளது. தாவா கிணற்றிற்கும் எனது நிலத்திற்கும் இடையே சுமார் ஒரு கி.மீ தூரம் இருக்கும். எனது கிணற்றிற்கும் வீட்டிற்கும் செல்வதற்கு வேறு வழி உள்ளது. தாவா கிணற்று வழியாக செல்லவேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். எனவே தாவா கிணற்றின் ஆழம் மற்றும் அமைப்பு மற்றும் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதில் யார் யாருக்கு கூட்டு பாகம் உள்ளது என்று எனக்கு தெரியாது. நிரூபண பிராமாண வாக்குமூலத்தை தட்டச்சு செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். எனது நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் என்ன விபரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. வாதி என்னை இன்று சாட்சியம் அளிக்க அழைத்ததால் நான் வந்துள்ளேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.09.04 18:14:33 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்